**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 53/2024 |
| Name | : Rasappan |
| P.W. | : 3 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.08.2025

**எதிரிகள் 1 முதல் 12 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மலையாண்டிபட்டிணத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலீசார் விசாரணையில் கடந்த 01.07.2020 முதல் 30.06.2021 முடிய எங்கள் ஊர் கரிய வரதராஜ பெருமாள் திருக்கோவிலுக்கு சொந்தமான க.ச.எண்.238/3 கோவில் பூமியை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வருவதாகவும் திடீரென்று 18.12.2020ம் தேதி மாலை 06.30 மணி அளவில் எங்கள் ஊரைச் சேர்ந்த பலர் பூமிக்குள் அத்துமீறி நுழைந்து பட்டா வழங்குமாறு கேட்டு பிரச்சனை செய்வதாக கோவில் செயல் அலுவலருக்குபோன் செய்து தகவல் சொன்னதாகவும் செய்ல அலுவலர் மற்றும்

கணக்குப்பிள்ளை அங்கு வந்ததாகவும் அப்போது பட்டா கொடுக்குமாறு அங்கிருந்தவர்கள் அவர்களை மிரட்டியதாகவும் பட்டா கொடுக்கவில்லை என்றால் கொன்றுவிடுவதாக மிரட்டியதாகவும் செயல் அலுவலர் என்னிடம் பூமிக்குள் அத்துமீறி அமர்ந்துள்ளவர்கள் விவரம் கேட்டதற்கு எதிரிகளின் விவரங்களை தெரிவித்ததாகவும் எதிரிகள் அங்கே இருந்து வெளியே செல்லாமல் செயல் அலுவலரை பணி செய்ய விடாமல் தடுத்ததாக புகார் கொடுக்கப் போவதாக சொல்லிவிட்டு செயல் அலுவலர் அங்கிருந்து சென்றுவிட்டதாக சொல்லிவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/-Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 53/2024 |
| Name | : Ponnusamy |
| P.W. | : 4 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.08.2025

**எதிரிகள் 1 முதல் 12 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மலையாண்டிபட்டிணத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். சுமார் **4-5** வருடங்களுக்கு முன்பு மாலை **06.00** மணிக்கு மாலையாண்டிபட்டிணத்தில் உள்ள எனது தோட்டத்திற்கு சென்றேன். அங்கு பட்டா கேட்டு கூட்டமாக இருந்தார்கள் என்னவென்று போய் பார்த்தேன். போலீசார் இருந்தார்கள். போலீசார் என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். என்னுடன் ராமு என்பவர் கையொப்பம் போட்டார். எதற்காக கையெழுத்து போட்டேன் என்று தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். **சாட்சியின் கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 19.12.2020ம் தேதி காலை 07.00 மணிக்கு எனது தோட்டத்திற்கு சென்று

கொண்டிருந்த போது முன்தினம் 18.12.2020ம் தேதி மாலை 06.30 மணிக்கு கோவில் நிலத்தில் அத்துமீறி பட்டா கேட்டு பிரச்சனை செய்தது சம்மந்தமாக கணியூர் போலீசார் சம்பவ இடத்தில் விசாரித்து வரைபடம் வரைந்ததற்கு சாட்சியாக கையெழுத்து போட்டுவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்